244 ஆன்மீகம்

# ஆண்டவனும் ஆண்டவரும்

இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடிக்கு
அருகில் உள்ள கோவிலூர்க்
குடநீராட்டு விழாவன்று
(21-4-78) வெளியிடப்பட்டது.

ஆக்கியோன்

சொ. சொ. மீ. சுந்தரம்

இலவச வெளியீடு

உயர்திரு.

அரு. கி. கிருஷ்ணன் செட்டியார் அவர்கள்
பாகனேரி.

திருமுறைப் புரவலர்

இராம. முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்கள்
பாகனேரி.

Ac. No: 1973
R65

1973
R65
2472
1973 24-4

## முன்னுரை

ஆண்டவனும் ஆண்டவரும் அம்மையுடன் நம்மவரை
ஆண்டருளும் பேற்றை அறிவிக்கத் - தூண்டுமத
ஐங்கரனும் தேவை அருட்சிலம்பை நாயகனார்
துங்கமலர்ப் பாதம் துணை.

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கும் செட்டிமார் நாட்டில், பெட்டியடி வைத்த இடமெல்லாம் பிள்ளையார் கோவில் இருக்கும். மன்னர் பின்னோராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், தங்கள் பெயருக்கேற்ப, முன்னாளில் மன்னர்கள் கட்டிய ஆலயங்களுக்கெல்லாம் திருப்பணி செய்து, வசி வழங்கினார்கள். நகரத்தாரை இவ்வழியில் செலுத்திய பெருமை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோவிலூரில் அருளாட்சி நடத்திய கோவிலூர் ஆண்டவர் என்னும் தவத்திரு முத்துராமலிங்க ஞான தேசிகர் அவர்களையே சேரும். ஆண்டவரும் அவருக்குப் பின் வந்த மடாதிபதிகளும் தனவணிகர்களைச் சிவப்பணியில் ஈடுபடுத்தியது போல, இப்பொழுது கோவிலூரில் மடாதிபதியாக எழுந்தருளியிருக்கும் கருணைவள்ளல் [illegible] தவத்திரு. இராமனுதசுவாமிகள், திருநெல்லையம்மை உடனாகிய கொற்றவாளீசர் ஆலயத் திருக்குட நீராட்டுச் செய்யத் திருவுளம் பற்றினார்கள். தனவணிகப் பெருமக்களின் முயற்சியால் நடைபெறும் இக்குட நீராட்டு விழா நினைவாக, இச்சிறுநூல் வெளியிடப்படுகிறது.

இப்பணியில் என்னையும் ஒருபொருளாக்கி ஈடுபடுத்தித் திருநெல்லையம்மையின் அருள் பெற வைத்தவர்கள் இரண்டு தனவணிகப் பெருமக்கள். ஒருவர் தனவணிகர் குலதிலகமாய் விளங்குபவரும், பாகனேரி புல்வாயம்மன் ஆலயத்திற்குத் திருத்தேர் செய்து வைக்கும் திருப்பணியில் பெரும்பங்கு பெற்றவருமாகிய பாகனேரி உயர்திரு குப. அரு. கிருஷ்ணன்

1978


செட்டியாரவர்கள். இன்னொருவர் திருமுறைப் புரவலரும் சிவதர்ம சீலருமாகிய பாகனேரி இராம. முத்துப் பழனியப்ப செட்டியார் அவர்கள். தமிழகத்தில் எந்த ஆலயத்தில் குட நீராட்டு விழா நடந்தாலும், அங்கே திருமுறைப் பாடல்கள் அனைத்தையும் முறையாகப் பாராயணம் செய்யும் திருமுறைப் பாராயணத்தைத் தேவார ஓதுவார்களைக் கொண்டு செய்விப்பதைத் தன்வாழ்வின் பயனாகக் கருதும் முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்கள், இதுவரை மதுரை, இராமேஸ்வரம், திருவண்ணாமலை, நாட்டரசன் கோட்டை, பிள்ளையார்பட்டி, கொல்லங்குடி, கீழப்பூங்குடி, புதுக்கோட்டை முதலிய பல இடங்களில் திருமுறைப் பாராயணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தன் மனைவி, மகன், மருமகள் அனைவரையும் திருமுறைப் பணியில் ஈடுபடுத்திய அவர்கள், கோவிலூர் மடாதிபதியாக எழுந்தருளியிருக்கும் தவத்திரு இராமனாத சுவாமிகளிடம் பெருமதிப்பும் மரியாதையும் கொண்டவர்கள். இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த பெருமக்கள் இருவருக்கும் நீண்ட புகழையும், நிறை செல்வப் பேற்றையும், பல்லாண்டு இருந்து பயன்தரும் வாழ்வையும் வழங்கத் திருநெல்லை அம்மை திருவடிகளை வணங்குகிறேன்.

இந்நூலை மிகவிரைவில் உயர்ந்த முறையில் அச்சிட்ட மதுரை ஓரியண்ட் அச்சகத்திற்கும் அதன் உரிமையாளர் திரு. ஆத. சொக்கலிங்கம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*நெல்லை நாயகி நிறைமலர் அடிகளில்—இப்*
*புல்லிய நூலைப் பொலிவுறச் சேர்க்கிறேன்.*

சௌராட்டிராக்கல்லூரி,
மதுரை
18—4—1978.

பணிவுள்ள,
**சொ. சொ. மீ. சுந்தரம்**



உ
சிவமயம்

# ஆண்டவனும் ஆண்டவரும்

மங்கலமான விடிகாலே நேரம். மனஇருள் நீங்கி ஒளிவரும் நேரம். அந்த நேரத்தில், பக்கத்தில் உள்ள ஆலயத்திலிருந்து,

"என்னேயும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே".

என்ற திருப்பள்ளி எழுச்சிப் பாடல் காதுகளில் தேனூறு போலப் பாய்கிறது. "என்னேயும் ஆண்டுகொண்டு" என்ற சொற்களில் ஆண்டவனுடைய அருமையில் எளிய அழகு தெரிகிறது. "என்னே யார்யார் எப்படி, எப்படியெல்லாம் வழிபடுகிறார்களோ அவர் அவர்களுக்கு அப்படி அப்படிக் கொடுக்கிறேன்" என்று "கேவலம் கேழலாய்ப் பால்கொடுத்த கிடப்பு" நம் நெஞ்சைத் தொடுகிறது. வானளாவிய கதிரவன் தனக்கு வேறு வேலேயே இல்லே என்பது போல ஒரு சின்னஞ்சிறு தாமரையை மலர்விக்கிறான். வடிவங்களுக்-கெட்டாத ஆண்டவனும், ஒவ்வொருவருடைய ஆன்மாவையும் மலர்விக்கிறான். இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்-தருளுகிறான். வயிற்றுப் பசிக்குப் பால்கொடுக்கும் பசுவைப் போல, மனப்பசிக்கும் ஆன்மாவின் பசிக்கும் ஞானப்பால் கொடுக்க, அறக்கடவுள் காமதேனுவாகக் காட்சியளிக்கிறான்.

பசு தானுகப் பால் தருவதில்லே. கன்று முட்டினுல் தான் பசு பால்சொரியும். வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுவாக இறைவன் இருக்கிறான். அவன் மடியில் முட்டும் கன்றுகளாக அடியார்களும், ஞானிகளும், துறவிகளும் இருக்கிறார்கள். ஞானசம்பந்தர் என்ற கன்று முட்ட, சீர்காழிப்பசு பால் சொரிகிறது. அந்த ஞானப்பால் உண்டதும் மதுரை மன்னனுக்கு மயக்கம் தெளிகிறது.

கண்ணன் என்ற பசு, அருச்சுனன் என்ற கன்றுக்கிரங்கி, போர்க்களத்தில் கீதைப்பால் சொரிந்தது. அந்தப் பால் அனைவருக்கும் அமுதமாயிற்று.

அதுபோல, அடியார்களுக்குப் பால்கொடுக்க வந்த இறைவன் கருணை, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த காரைக்குடிக்கு அருகில் உள்ள கோவிலூரிலே, கொற்றவாளீசன் என்ற திருநாமத்தோடு, கன்றுக்காகக் காத்திருந்தது. கன்று காரைக்குடியிலே சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கச் செய்பணியாலே சிறப்புடன் உயர்ந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் 1791 ஆம் ஆண்டில் அவதரித்தது- தன்னுடைய பதினேழாவது வயதிலே கன்று பசுவைக் கண்டுகொண்டது அன்றுமுதல் கோவிலூரிலே ஞானப்பால் பெருக்கெடுத்து வேதாந்தப் பேராறாக ஓடுகிறது. ஆண்டவனாகிய பசுவின் கன்றாகத் திகழ்ந்த அடியவரைக் "கோவிலூர் ஆண்டவர்" என்றும் "முத்துராமலிங்க ஞான தேசிகர்" என்றும் கூறுகிறோம். அந்த ஆண்டவர் பெருமையையும் அவரை ஆட்கொண்ட ஆண்டவன் எளிமையையும் இருவரையும் கூட்டி வைத்த அம்மையின் கருணையையும் விளக்குவதே இச்சிறு நூலின் குறிக்கோள் ஆகும்.

சங்க நூல்களில் அவனை அவர் பாடியது என்று வரும். பாடப்பட்ட அரசனை அவன் என்றும் பாடிய புலவரை அவர் என்றும் கூறுவது மரபு. தேவார காலத்தில் ஆரூரனை ஆரூரர் பாடியது என்பதுண்டு. ஆரூரன் என்பது திருவாரூர்ப் பெருமானையும் ஆரூரர் என்பது நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் குறிக்கும். அடியவருக்குச் சிறப்பு விகுதி கொடுத்து, ஆரூரன் தன்னை 'அன்' விகுதியோடு சேர்த்துக்கொண்டான். அதுபோல "ஆண்டவனும் ஆண்டவரும்" என்ற சொற்றொடரில் "ஆண்டவன்" என்பது கோவிலூர்ப் பெருமானையும், "ஆண்டவர்" என்பது குருநாதனாக எழுந்தருளிய கோவிலூர் ஆண்டவரையும் குறிக்கும். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதேயன்றோ!

# கோவிலூர்ப் பெருமை

''மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

என்றார் தாயுமானுர். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் பெருமை பெற்றது கோயிலூர். அன்பாண்டு மீனா அருள்புரி-வான் நாடாகிய தென்பாண்டித் திருநாட்டில், மணிவாசகர்க்கு' செந்தழல் புரைதிருமேனியும் காட்டித் திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டினுன் இறைவன். அந்தத் திருப் பெருந்துறை என்ற ஆவுடையார் கோயிலுக்கு மேற்கிலும், ''யாமிருப்பது கானப்பேர்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கனவில் கூறிய காளீசன் உறையும் காளையார் கோயிலுக்கு வடக்கிலும் தென்பாட்டுத் தென்பாண்டித் திருப்புத்தூருக்குக் கிழக்கிலும் சத்தியமூர்த்தியாகத் திருமால் உறையும் திருமயம் என்ற திருமெய்யத்திற்குத் தெற்கிலும் அமைந்தது கோவிலூர். காரைக்குடி – மதுரைப் பெருஞ்சாலையில் காரைக்குடியிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இத்தலத்தை. சமிவன க்ஷேத்திரம், ஸ்ரீவல்லபம், சாலிவாடிபுரம், வன்னிவனம் என்னும் பெயர்களால் புராணங்கள் புகழு-கின்றன.

இத்தலத்தின் பெருமையை வடமொழி ஸ்காந்த-புராணம், சனற்குமார சங்கிதை, க்ஷேத்திர காண்டத்தில் விளக்குகிறது. சமிவன மான்மியம் என்ற தலைப்பில் பனி ரெண்டு அத்தியாயங்களில் 875 சுலோகங்கள் இத்தலத்தின் மேன்மையை விளக்குகின்றன. இவற்றைத் திருவிடை மருதூர் பிரம்மஸ்ரீ பிச்சு சாஸ்திரிகள், தமிழில் வசனமாக மொழிபெயர்த்தார்கள். இந்நூல் காரைக்குடி மேலை மடாலயம் சேவு. பழ. பழனியப்பய்யா குடும்பத்தாரால் 1928ல் வெளியிடப்பட்டது.

இரண்டாம் கம்பர் என்று போற்றப்பட்ட திருவாவடு துறை ஆதீன மகாவித்வான் திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம்

பிள்ளையவர்கள், கோவிலூர்த் தலத்தின் பெருமையை விளக்கும் கோவிலூர்ப் புராணத்தை, 14 படலங்களில் 849 பாடல்களில் பக்திச் சுவைதனி சொட்டச் சொட்டப் பாடியருளியிருக்கிறார்கள். இத்தலத்தைத் தூரத்தேயிருந்து எண்ணினாலும் பாவம் தொலையும் என்பதை

"வீரத் தேபொலி வெம்மழு வாளிவாழ்
ஈரத் தேமலர் ஏயும் சமிவனம்
தூரத் தேயிருந் தெண்ணினும் தோமெலாம்
தீரத் தேய்க்குமைம் பாவமும் தீர்க்குமே".

[தோம்—குற்றம்]

என்றும், ஞானிகள் வாழும் இத்தலத்தில் பகையில்லை என்பதை விளக்க, மானின் மடியில் புலிக்குட்டி பால் குடிக்கும் என்று கூறி

"ஐய விதென்ன அற்புதம்! மானெலாம்
வையம் ஓம்ப மடியில் சுரந்தபால்
செய்ய கன்றொடு தீம்புலிக் குட்டியை
உய்ய ஊட்டுவ ஆங்கொரு பாலரோ"

என்றும் பாடியிருப்பது நினைத்து வணங்கத் தக்கதாக நிற்கிறது.

வடமொழி ஸ்காந்த புராணம் இத்தல மேன்மையைப் பின்வருமாறு கூறுகிறது.

இத்தலத்தில் நெல்லிக்காயளவு அன்னதானம் செய்தால் சொர்க்க போகம் கிடைக்கும். தம் சக்திக்குத் தக்கபடி அன்னதானம் செய்தவர்கள் குபேரப் பதவியை அடைவார்கள். இங்கே இறந்தவர்கள் சிவசொரூபத்தை அடைவார்கள். இத்தலத்தில் திருநீறும் சிவமணியும் தரித்துக் கொண்டு, சிவராத்திரியன்று வழிபட்டவர்கள், இனிப்பிறவாத நிலையை எய்துவார்கள்.

புராணப் பெருமையுடன் வரலாற்று மேன்மையும் உடையது இத்தலம். "கழனி வாயில்" என்றும் "ஏழகப் பெருந்தெரு" என்றும் 'வீரபாண்டியபுரம்' என்றும் "மகேந்திரபுரம்" என்றும் இத்தலம் புகழப்படுகிறது. பாண்டி நாட்டு ஏழகப் பெரும்படை இருந்த இடமும் இதுவேயாகும். தனவணிகர்கள் வசித்த இடமும் அவர்கள் பெருமளவில் ஈட்டிய செல்வத்தை அறப்பணிக்கு அளிக்கத் தொடங்கிய இடமும் இதுவேயாகும். அடுத்த வாரிசுக்கென்று பொருளீட்டாமல், ஆண்டவன் ஆலயப் பணிக்கென்று பொருளீட்டிய தனவணிகர்கள் என்று இவர்கள் பெருமையைச் சிறப்பாகக் கூறுகிறார் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்.

## கொற்றவாளீசர் பெருமை

"கருக்குழியில் வீழ்ந்து கசடுறுத வாகிப்
பெருக்கமாம் பொய்ப்பொருளைப் பேணு—மருக்கமழும்
தென்கழனி யூரில் சிறந்த கொற்ற வாளீசர்
பொன்கமலத் தாளிணையே போற்று".

(கோவிலூர் ஆண்டவர்)

இத்தலத்தில் உறையும் சிவபெருமான் திரிபுவனேஸ்வரர் இராஜகட்க பரமேஸ்வரர், கொற்றவாளீசர் என்னும் திருப்பெயர்களுடன் விளங்குகிறார்.

காளையார் கோயிலில் அரசுபுரிந்த வீரபாண்டிய மன்னன் காளீஸ்வரப் பெருமான் அருளால் ஒரு வாளைப் பெற்றான். வெற்றியன்றி மற்றதையறியா அந்த வீரவாளை இராஜகட்கம் என்றும் கொற்றவாள் என்றும் போற்றி, எப்பொழுதும் தன்னுடனேயே வைத்துக் கொண்டிருந்தான். ஒருசமயம் வேட்டையாடச் சென்ற அரசன், ஒருமானைத்

துரத்திக்கொண்டு நீண்டதூரம் வந்துவிட்டான். கோவிலூருக்குப் பக்கத்தில் மான் மறைந்துவிட்டது. நீண்டதூரம் வந்த களைப்பினால் பக்கத்திலிருந்த குளத்தில் நீரருந்திய அரசன், உடைவாளைக் கழற்றிப் பக்கத்தில் வைத்துவிட்டு, கண்ணயர்ந்திருந்தான். சிறிது நேரத்தில், திடீரென்று கேட்ட சத்தத்தால் கண்விழித்த அரசன், ஒரு வேதியர் புலிவாயில் சிக்கிக் கதறுவதைக் கண்டான். "என்னைப் புலிவாயிலிருந்து காப்பாற்றுங்கள்" என்று கதறிய வேதியரைக் கண்டதும் அடைக்கலப் பொருளைக் காக்க வேண்டுமென்று கருதி, புலியைக் கொல்ல உடைவாளை எடுக்க முயன்று திரும்பிப்பார்த்தான். உடை-வாள் வைத்த இடத்தில் இல்லை. அரசன் அஞ்சாமல் புலியின் பக்கம் சென்றான் "புலியே! இந்த வேதியன் உடலில் சதைகளே இல்லை. எலும்புதான் இருக்கிறது. அதைத்தின்றால் உன் பல் போய்விடும். எனவே அவனை விட்டுவிடு. என்னைச் சாப்பிட்டு உன்பசியைத் தணித்துக்கொள்" என்று கூறினான். புலியோ "அரசனே! நாடு காக்கும் அரசனாகிய நீ, நாட்டின் நலத்திற்கு இன்றியமையாதவன். வேதியனுக்காக நீ ஏன் உயிர்விட வேண்டும்? நீ உன் வழியில்போ. நான் இவனைக் கொன்று தின்று பசியாறுகிறேன்" என்றது. சிவபக்தனும் அடைக்கலம் காப்பவனுமாகிய அரசன் "என்னுடல் இன்றோ நாளையோ போவதுண்மை. என்னை அபயமென்றடைந்தவனைக் காக்காமல், உடம்பைக்காத்தால் எனக்குப்பழியுண்டாகும். அடைந்தவரைக் காக்கத்தானே அரசர்கள் ஆயுதம் தரிக்கிறார்கள்". என்று கூறித் தன் தலையைப் புலியின் வாயில் நுழைக்க, புலியும் வேதியனும் உடனே மறைந்து விட்டார்கள். கனவோ நனவோ என்று தெரியாத அரசன் திகைத்து நிற்கும் போது அரசனைத் தேடி வந்த பரிவாரங்கள் அவ்விடத்தை அடைந்தன. அரசன் நடந்தவற்றைக் கூறித் தன்னுடைய கொற்றவாளைத் தேடச் சொல்ல, அவர்களும்

தேடிப் பார்த்து, கோவிலூரில் ஒரு சிவலிங்கத்தின் அருகில் கொற்றவாளைக் கண்டு பிடித்து அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசன் வந்து பார்த்து, வன்னி மரத்தடியில் வீற்றிருக்கும் மகாலிங்கப் பெருமானை வழிபட்டு, "என்னை ஆட்கொள்ள புலியைக் கொண்டு வந்தாயே! அரையில் கட்டிய புலியைக் கொண்டு வந்தாயா? அம்பலத்தில் நடனம் காணும்புலியைக் கொண்டு வந்தாயா? உன்னைத் தவிர எனக்குக் கதியில்லை.

"மறையா தனத்தாய்! உனையடைந்தேன்
    மறைப்பா துகையாய்! உனையடைந்தேன்
மறைமா வுகைப்பாய்! உனையடைந்தேன்
    மறைக்கோ வணத்தாய்! உனையடைந்தேன்
மறைமா மொழியாய்! உனையடைந்தேன்
    மறைநா புரத்தாய்! உனையடைந்தேன்
மறைவான் பொருளே! உனையடைந்தேன்
    மறையி னுணராய்! உனையடைந்தேன்"

என்று வழிபட, இறைவன் உமையவளின் இடப்பாகம் உயர்ந்து தோன்ற, ஒளிவிளக்கும் மான்மழுவும் கரத்தில் தோன்றக் காட்சியளித்து ஆட்கொண்டான். மகிழ்வுற்ற அரசன் "நான் வன்னி மரத்தடியில் காட்சி பெற்றதால் இப்பதி வன்னிவனம் ஆகவேண்டும். கொற்றவாளுடன் காட்சிதந்த தேவரீர் திருநாமம் கொற்றவாளீசனாக வேண்டும். இவ்விடத்தில் வழிபட்டவர் துன்பம் அகலவேண்டும்" என்று வேண்டிக் கொள்ள இறைவன் இவ்வரங்களை அருளினான். அரசன் அவ்விடத்தில் ஒரு சிவாலயம் எடுப்பித்தான். கோவிலூர்ப் புராணத்தில் கொற்றவாளீசப் படலம் இவ்வரலாற்றை விரிவாகப் பாடுகிறது.

இதுபோலவே, மதுப்பிரியர் என்னும் முனிவர் இறைவனை உணரப் பெருந்தவம் செய்தார். ஆக்கல்

காத்தல் அழித்தல் தொழில்களைச் செய்யும் நான்முகன், திருமால், ருத்திரன் மூவரும் அவருக்குக் காட்சிதர, அவர்களை நோக்கி உலகிற்குக் காரணமான மூலமூர்த்தி யாரென்று முனிவர் கேட்க அவர்கள் நாங்கள் அல்லர் எனக்கூறி மறைந்தனர். மீண்டும் முனிவர் தவம்செய்ய, அதைத் தாங்க முடியாத தேவர்கள் நான்முகனிடம் முறையிட்டனர். நான்முகன்முனிவர்முன்தோன்றிஇறைவனைப்பிரமவித்தையால் உணரலாம் என்று கூறினர். முனிவர் "தாங்களே அந்தப் பிரமவித்தையை எனக்குபதேசிக்க வேண்டும்" என நான்முகன் உபநிடதப்பொருளையும் இறைவன் பெருமை யையும் கூறி

"பரமசிவ சொருபத்தை யேயுணர்தல் வேண்டிப்
பண்ணும் காமாதி களைந்துதவம் புரிந்து
பரமசிவ சொருபத்தை உணர்உபாயம் அதாய்ப்
பயில்பிரம வித்தைவிருப் புற்றமா முனியே

என்று கூறினர். முனிவரும் பிரமன் கூறியபடி, காமாதி களைந்து சமிவனத்தில் தவம் செய்ய மூவர்கோனும் நின்ற முதல்வனுன கொற்றவானீசன் காட்சிதந்தான். பிறவிப்-பயனடைந்த முனிவர் இறைவனை வணங்கி, "இச்சமிவனத்-தில் பஞ்சாக்கர சொரூப விமானத்தோடு திரிபுவனேசன் என்னும் திருநாமத்தோடு மூவர்க்கும் மூலகாரணமாய்க் காட்சிதரவேண்டும்" என்று வேண்ட இறைவன் அப்படியே செய்தான். மதுப்பிரியர் தவம் செய்த இடத்திற்கு அருகில் ஓடும் நதி மதுநதி (தேனுறு) என்றும், அந்தத் தடாகம் மதுபுஷ்கரணி என்றும் பெயர் பெற்றன. இவ்வரலாற்றை உபநிடதப் பொருளுரைத்த படலமும், மதுப்பிரியர் துதி-யுரைத்த படலமும் குறிப்பிடுகின்றன.

கோவிலூரில் செய்யப்படும் அன்ன தானத்திற்கு நிகரில்லை. சுவேதன் என்னும் அரசன், தவத்தினுல் பிரம்ம

லோகத்தை அடைந்தான். ஆனால் பிரம்ம லோகத்திலும் பசியினால் பிடிக்கப்பட்டான். அன்னதானம் செய்யாத காரணத்தால் பிரம்ம லோகத்திலும் பசி வருத்துவதைப் பிரம தேவர் மூலம் அறிந்து, அவர் கூறியபடி, பசியைத் தீர்க்க எந்த வனத்தில் தன்னுடைய தேகத்தை விட்டானோ, அந்த வனத்திற்கு ஒவ்வொரு நாளும் சென்று, தன்னுடைய பிரேத தேகத்தைத் தின்று பசியைத் தீர்த்துக் கொண்டான். அந்தத் தேகம் நாசமடையாமல் மீண்டும் மீண்டும் வளர்ந்து வந்தது. ஒருசமயம் அவ்வனத்திற்கு வந்த அகத்தியர் இதை வினவி அறிந்து கொண்டார். அரசன் அவரை வணங்கித் தன்னுடைய முத்துமாலையை அளிக்க, அதை அகத்தியர் பெற்றதும் அவனுடைய பிரேத தேகம் அழிந்து போக, அவனும் பசிமாறி உய்வுற்றான். அந்த மன்னன் மகன் இதையறிந்து, "அன்னதானம் செய்யச் சிறந்த இடம் எது வென்று அகத்தியரைக் கேட்க அவர் "சமீவனம் என்ற வன்னிவனம் (கோவிலூர்) அதற்குத் தக்க இடம்" என்று கூற அவனும் வன்னிவனம் வந்து அன்னதானம் செய்ய வசதியாக சலி என்னும் செந்நெல் விளையும் வாடி என்னும் வயல்களை உண்டாக்கினான். அன்றுமுதல் இப்பதி சாலிவாடி எனப் பெயர்பெற்றது.

வேண்டுவார் வேண்டுவதே ஈந்து காக்கும் கொற்ற வாளீசப் பெருமானை வழிபடச் சிவராத்திரியன்றும், ஆடி அமாவாசை போன்ற புண்ணிய நாட்களிலும் எண்ணிறந் தோர் வருதல் இன்றைக்கும் காணத் தக்க காட்சியாகும்.

# தீர்த்தச் சிறப்பு

புண்ணிய மிகையால் இந்தத் தடம்புகுந் தாடப் பெற்ருேர்க்(கு)
அண்ணிய தவம்தா னங்கள் அறைதரும் விரத மாதி
பண்ணிய திறத்தால் என்ன பயனுள அவைக்கும் மேலாம்
நண்ணிய பலனே நல்கும் நாம்விரித் துரைப்ப தென்னே.

(கோவிலூர்ப் புராணம்)

மூர்த்தி, தலம் இரண்டாலும் புகழ்பெற்ற கோவிலூர், தீர்த்த விசேடமும் பெற்றது. மதுப்பிரிய முனிவர் தவம் செய்ததால் மதுபுஷ்கரிணி எனும் பெயர் பெற்ற இத்தீர்த்தம் பாவங்களை மாற்றுவது. சூரதன்மா என்ற பாண்டியமன்னன் விதிவசத்தால் சமணமதத்தைத் தழுவினன். அவனை மாற்ற முயற்சித்த அவன் மனைவி சுருபிணி அவனை மாற்ற முடியாமல் அவன் இறந்தபோது தானும் இறந்து போனள். இறந்த மன்னன் மறுபிறப்பில் சாகலபுரம் என்ற ஊரில் இளவரசனுகவும், சுருபிணி அகளங்கபுரத்து இளவரசியாகவும் பிறந்தார்கள். முன் செய்த பாவத்தால் இளவரசன் ரோகத்தால் பிடிக்கப்பட்டான். அகளங்கபுரத்து இளவரசி, தன்சுயம்வர மண்டபத்தில், இந்த ரோகியைக் கண்டு, சென்ற ஜன்மத் தொடர்பால் அவன் கழுத்தில் மாலையிட்டு அவனை மணந்து கொண்டாள். கணவன் ரோகம் நீங்கப் பலதலங்களுக்கும் சென்று வழிபட்டுக் கடைசியில், கோவிலூர்க்கு வந்து கார்த்திகைச் சோமவாரத்தில் கணவனுடன் மதுபுஷ்கரணியில் நீராடி, கொற்றவாளீசரை வணங்க, அவள் கணவனுடைய ரோகம் நீங்கியது. இத்தீர்த்தத்திற்கு மேற்புறத்தில் உள்ள பிரம தீர்த்தத்தில் மூழ்கினலும், செய்தவினை மாறித் திருவருள் கிட்டுமென்று தலபுராணம் கூறுகிறது.

சூரதன்மாவின் வரலாற்றைப் போலவே வீரசேன பாண்டியனின் வரலாறும் தீர்த்தச் சிறப்பைத் தெளிவாகக்

காட்டுகிறது. வேட்டைக்குப்போன விரசேன பாண்டியன் கண்ணுவ முனிவர் வளர்த்த மானை வேட்டையாடிக் கொன்று விட்டான். இதனால் சினமுற்ற முனிவர் அரசனை வேடனாக மாறும்படி சபித்துவிட்டார். தன் நினைவின்றி நாடோடியாக அலைந்த அரசன் சமிவனம் சேர்ந்தான். மதுபுஷ்கரிணியின் கரையில் மயக்கத்துடன் படுத்திருந்த வேடன் மீது குளத்து மீன்கள் கருணை கொண்டன. நம்மைக் கொடியாக உடைய பாண்டியனைக் காப்பாற்ற வேண்டுமென்று, அவன்மீது மதுபுஷ்கரணித் தீர்த்தத்தைத் தம் சிறகால் அடித்து மீன்கள் தெளிக்க, உணர்ச்சியுற்ற வேடன் அக்குளத்தில் முழுகி எழுந்தான். உடனே தன் சாபம் மாற மீண்டும் அரசனாக மாறினான். என்று தீர்த்தமகிமைப் படலம் கூறுகிறது.

## திருநெல்லையம்மையின் சிறப்பு

"அல்லலெனும் பிணியகற்றும் அருமருந்தை எனதகத்துள்
அமர்ந்த தாயைச்
சொல்லரிய பரஞ்சுடரை அகம்புறமும் சுகமளிக்கும்
துரிய வாழ்வைப்
பல்லுருவும் படைப்பாளைப் படைத்தவையாய் இருப்பாளைப்-
படையா தாளைச்
செல்லாத இருளகற்றும் திருநெல்லை நாயகியைச்
சிந்தை சேர்ப்பாம்.

(கோவிலூர் ஆண்டவர்)

ஆலவாயமுகன் அருள்புரிவதற்கு அங்கயற்கண்ணியைப் பெற்றது போலக் கொற்றவாளீசர் குறைவறுங் கருணை திருநெல்லை நாயகியாய்த் திகழுகின்றது. அடியவரை ஆண்டவன்பால் ஆட்படுத்தும் அருளுருவே அன்னையவள் வடிவமாகும். குமரகுருபரருக்கு முத்துமாலை

யளித்த அம்மையின் திருவிளையாடல் கோவிலூரிலும் நிகழ்ந்தது. அவ்வரலாற்றைப் படித்தாலும் கேட்டாலும் பண்டைவினைப் பாரமெலாம் பனியாக மறைந்துவிடும்.

கோவிலூரில் சிவகுப்தன் என்ற வணிகனுக்கும் சுதர்மை என்ற நங்கைக்கும் திருமணம் நடந்தது. இருவரும் திருநெல்லையம்மையுடனாகிய கொற்றவாளீசனை நிறைவோடு வழிபட்டு இரத்தினவல்லி என்ற மகளைப்பெற்றார்கள். மகள் வயதடைந்து, தங்களுடைய நெல்வயல்களைக் காவல் காத்துத் தோழியரோடு விளையாடி, வளர்ந்து வந்தாள். காவல் புரியும் மகளுக்கு, அவளுடைய தாய் சுதர்மை ஒவ்வொரு நாளும் தயிரன்னமும் ஊறுகாயும் கொடுத்து, உண்டு களைப்பாறச் செய்வாள். ஒருநாள் வழக்கம் போலத் தயிரன்னம் கொண்டு வந்த தாய், தன்மகள் என்றுமில்லாத அழகோடும் ஒளியோடும் விளங்கக் கண்டாள். சாலிப்பயிர் நுனிகளைக் காதில் வைத்துக்கொண்டு, நெற்றிப் பிறையில் குங்குமம் இட்டு, மான்போன்ற கண்களுடன் நிற்கும் மகளைக் கண்டதாய், தாமரை இலையில் தயிரன்னத்தை ஊறுகாயுடன் வைத்துக் கொடுக்க, பசியினால் அதை மகிழ்வோடும் மகள் சாப்பிட்டுக்களைப்பு மாறியவள் போல நின்றாள். மகளை மீண்டும் நெற்பயிர் காக்க அனுப்பிய தாய் வீட்டுக்குச் சென்றாள்.

வீட்டிலே இரத்தினவல்லியான மகள் தாய்க்காகக் காத்திருந்து "இவ்வளவு நேரமாகி விட்டதே. ஏனம்மா வரவில்லை? எனக்குப் பசியாயிருக்கிறது" என்று கூறவும், தாய் திடுக்கிட்டு நான் தந்த தயிரன்னத்தை மகிழ்வோடும் அருந்தினாயல்லவா, எப்படிப் பசிக்கும்? என்று கேட்க மகள் அதை மறுத்து ஒட்டிப் போய்க்கிடந்த தன் வயிற்றைக்

காட்டினுள். தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. சுற்றத்தார்களுக்கும் ஒன்றும் விளங்காமல் இருக்கும் போது ஆலயத்தில் வீற்றிருக்கும் திருநெல்லை அம்மை கடைவாயில் தயிரன்னம் ஒட்டியிருக்க, செவியில் சாலிப்பயிர் நுனிகளை அணிந்து, நெற்றிப்பிறையில் குங்குமப் பொட்டணிந்து காட்சி கொடுத்தாள். இதையறிந்த ஊர்மக்கள் சுதர்மையின் பக்திக்கு மகிழ்ந்து, மகளாகி வந்து, தயிரன்னம் உண்ட அன்னையின் கருணையை வியந்து சாலிப்பயிர் வயல்களைக் காத்தமையால் அவளை சாலிவாடீஸ்வரி என்று புகழ்ந்து போற்றத் தொடங்கினார்கள்.

இதை மனதில் கொண்டு கோவிலூரில் பயிர்கள் முற்றித் தலைசாய்த்து இருக்கும் காட்சியைப் பாடிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், தம்மைக் காத்த அம்மைக்கு நன்றி செலுத்துவது போலப் பயிர்கள் தலைசாய்த்தன என்று பொருள் படும்படி

பிறைநுதல் பேரருள் நெல்லை நாயகி
நிறைதரக் காத்தலின் நிலவு நெற்பயிர்
அறையும்அந் நன்றியை அறிந்த வாமென
இறைகொழு கதிர்களால் எதிர்வ ணங்குமே.

என்று பாடிய நயம் போற்றற்குரியது. எல்லா உயிர்களையும் தானே காக்கும் தன்மையை விளக்க நெல்லை நாயகி ஓரறிவுப் பயிர்களைக் காத்து, அடியவர் இட்ட அமுதை உண்டாள். இதனாலேயே

ஓரறிவு முதலாம் ஐ யறிவுயிர்ப்பைங் கூழ்தழைய
ஒருங்கு காக்கும்
பேரறிவு வெளிப்படுப்பான் ஊறுணர்ச்சி உயிர்ப்பயிர்முன்
பிறங்கக் காத்துக்

காரறிவு தபக்களைந்து காரணநோக்கு உறும்பெரியோர்
கட்கா னந்த

நேரறிவு மயமான நெல்லைநா யகிமலர்த்தாள்
நினைந்து வாழ்வாம்.

என்று பாடியது கோவிலூர்ப் புராணம். இந்த அம்மையின் மேன்மையை

ஓராறு சமயருணர்த் துணராய் போற்றி
உணர்விலியேன் உணர்வுதனக் குணர்வே போற்றி
காராரும் மிடற்றோனும் அயனும் மாலும்
காண்பரிய ஒளிபோற்றி! கரியே போற்றி!
தாராரும் குலிசன்முதல் தேவ ரெல்லாம்
தாவரிய பரஞ்சுடரே தாயே போற்றி!
சீராரும் கழனியில்வாழ் சிவையே போற்றி
திருநெல்லை நாயகியே போற்றி போற்றி.

என்று போற்றிய கோவிலூர் ஆண்டவர் இந்த அம்மையின் திருவடியை நினைக்காதவர்களுக்கு அறிவுறுத்துவது போல

ஆரணங்கள் ஈதென்று அறிவரிய தென்கழனிப்
பூரணியை நீமறந்து புண்பட்டாய் நெஞ்சகமே.

என்றும் பாடினார். தென்கழனி என்பது கோவிலூரைக் குறிக்கும் பெயராகும்.

## 15

# கோவிலூர் ஆண்டவர் பெருமை

சித்தரும் பரவா நின்ற சீர்மிகும் கழனி தன்னில்
பித்தனும் எனையும் ஆளப் பேரருள் உருவாய் உற்ற
முத்தனும் முத்து ராம முதல்வன்நற் கமல பாதம்
நித்தமும் தொழுது வாழ்த்தி நெஞ்சினில் இருத்தல் செய்வாம்.

—கருணாநிதி சுவாமிகள்

சூரிய காந்தக் கல் என்றொரு கல் உண்டு. அதைச் சூரியனுக்கு முன் வைத்தால், தன்ஒளிபட்ட எதனையும் எரித்து விடும். சூரியனுக்கு முன் வைக்காமல், நிழலான இடத்தில் வைத்தால் எப்பொருளையும் எரிக்காது. நம் ஆன்மா சூரிய காந்தக்கல். பாசத்தை அது எரிக்கும். எப்பொழுது? குருநாதன் சந்நிதியில் ஆன்மா பாசத்தை எரிக்கும், மலங்களை எரிக்கும். தானே எரிக்காத சூரிய காந்தக்கல், சூரியன் சந்நிதியில் எரிப்பது போல, மலங்களைத் தானே எரிக்கமுடியாத ஆன்மா குருநாதன் சந்நிதியில் எரிக்கும்.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா.
சூரியன் சந்நிதி யில்சுடும் ஆறுபோல்
ஆரியன் திருமுன் சுற்ற மலங்களே.

என்றார் திருமூலர். இறைவனை அடைவது எளிது. ஆனால் இறைவனைக் காட்டுவது அரிது. அவனருளால் அவன்தாள் வணங்கி, அவன் காட்ட நாம் காண வேண்டும். எப்பொழுது தன்னை உணர்த்த வேண்டுமென்று இறைவன் நினைக்கிறானோ அப்பொழுது தானே குருநாதனாக வந்து காட்சியளிக்கிறான். உடம்பெடுக்கத் தேவையில்லாதவன் நமக்காக உடம்பெடுக்கிறான். பிறப்புக்கும் இறப்புக்கும் அப்பாற்பட்டவன் பிறப்பது

போலவும் இறப்பது போலவும் நடிக்கிறான். கல்லாலின் கீழ மர்ந்த கடவுள் காரைக்குடியில் நடந்து வருகிறான். குருந்த மரத்தில் காட்சியளித்தவன் வன்னிமரத்தடிக்கு வருகை தருகிறான். சித்தாந்தம் அறிந்த செட்டிநாட்டிற்கு வேதாந்த மடத்து விளக்கம் தருகிறான். தானே குருவாக வந்து, தன்னைத் தானே அருச்சித்துக் கொண்டு, தனக்குத் தானே "சுவானுபவத் திருவாக்கு"ரைத்து, தானே தனக்குக் கோயில் கட்டிக் கொள்கிறான்' இதுதான் கோவிலூர் ஆண்டவர் வரலாறு.

காரைக்குடியிலே மெய்யப்ப செட்டியாரும், வள்ளி-யம்மை ஆச்சியும் செய்த தவத்தினாலே 1791 ஆம் ஆண்டில், கோவிலூர் ஆண்டவர், முத்துராமலிங்கம் என்ற பெயர் பூண்டு.

> கட்டறுத்த சான்றோர்கள் கண்ணுதலின் காட்சிபெற
> விட்டுவிட்ட பாசத்தால் மேலோர்கள் வெற்றிபெறத்
> தொட்டதிரு நெல்லைக்குச் சோதிமணி மாடம்எழச்
> செட்டிமக்கள் குலம்விளங்கத் திருவவதா ரம்செய்தார்.

சிறுவயதிலேயே திருநீறணிந்து அகக்கண் திறந்திருந்தால் ஆனந்தம் பெருகுமென்று முகக்கண் மூடிநின்று முக்கண்ணன் பதம் நினைவார். நாகைப் பட்டினத்திற்கு அருகில் சிக்கல் என்ற தலம் உண்டு. சக்திவடி வேல்வாங்கித் தன்கரத்தில் ஏற்றவுடன் முத்துமுத்தாய் வேர்வைதரும் முருகன் திருத்-தலமான சிக்கலில், தம்தந்தையாருடைய வியாபாரத்தை மேற்பார்வை செய்யச் சென்ற முத்துராமலிங்கம், அந்த ஊருக்கு அருகில் உள்ள பொருள்வைத்த சேரியில் நெசவுத் தொழில் செய்து நினைவில் சிவனை வைத்த உகந்தலிங்க தேசிகர் என்ற ஞானியைச் சந்தித்தார். குருநாதன் பார்-

வையில் சிவபெருமானையே உணர்ந்த முத்துராமலிங்கம் தன்னுடைய பதின்மூன்றுவது வயதிலேயே அவரைச் சரணடைந்து

சகந்தனிலே பிறந்திறந்து வீணாக நாட்கழித்துத்
    தவித்த எந்தன்
அகந்தனிலே இருக்கின்ற பரவடிவை யான்அறிய
    அன்பு வைத்துச்
சுகந்தனிலே மேலான சுகம்பரம சுகமென்றே
    தோன்றக் காட்டும்
உகந்தகுரு தேசிகனை அனுதினமும் இருதயத்தில்
    உட்கொள் வேனே.

என்று பாடி, முற்றத் துறந்த பட்டினத்தடிகளின், முற்றிய ஞான முழுநிலை எய்தினார்.

பிறகு காரைக்குடிக்கு வந்த முத்துராமலிங்கம், அங்கே வசித்துவரும் நாளில் வடதேச யோகியொருவர் அவரைப் பார்த்து, "இவர் தட்சிணாமூர்த்தியின் கலையென் றறியுங்கள். உங்களை ஆட்கொள்ள ஆண்டவன் எழுந்தருளியிருக்கிறான்" என்று கூறினார். அதுமுதல் தனவணிகர்கள் அவரை ஆண்டவர் என்றே அழைக்கத் தொடங்கினர்.

மீண்டும் பொருள்வைத்த சேரிக்குச் சென்ற ஆண்டவர் வியாபாரத்தையும் கவனித்துக்கொண்டு, இலாபத்தைத் தம் குடும்பத்திற்கும், தம் நண்பர் நல்லான்செட்டியார் குடும்பத்திற்கும், குருநாதர் குடும்பத்திற்கும் கொடுத்து வந்தார். ஒருநாள் ஆண்டவர் மேனியில் காய்ச்சல் உண்டாக, அவர் அயர்வோடு படுத்திருக்கும்போது, ஒரு கன்னிகை தோன்றி "நான் காரைக்குடியிலிருந்து உன் காய்ச்சல் நீங்கத் தீர்த்தம் கொண்டுவந்தேன்" என்றுகூற, ஆண்டவர் அதை வாங்கி

அருந்தியதும் காய்ச்சல் மறைந்தது. அந்தக் கன்னிகையையும் காணவில்லை. இதை ஆண்டவர்தம் ஆசிரியரிடம்கூற, ஆசிரியர் "உனக்கு அருள்செய்தவள் காரைக்குடி கொப்புடையம்மை" என்று கூறினார். ஆண்டவர் அம்மையின் அருளை வியந்து

உன்னைக் கதியென் றடையாமல்
ஓகோ உலக வாஞ்சையினால்
என்னே இற்றை நாள்வரைக்கும்
இழிவாந் தொழிற்கே இழுத்தல்கண்டாய்
பின்னை எனக்கோர் கதியில்லை
பேசா திருந்தால் என்செய்வேன்
அன்னே இந்த மதியகற்றாய்
அம்மே கொப்பை உடையாளே

என்று பாடி

அப்பாய் நிலமாய் அனலாய் வளியாகிச்
செப்பும் ககனமாய்ச் சித்தாகிக் — கொப்புடையாள்
நின்ற நிலையறியா நெஞ்சகமே ஏன்பிறந்தாய்
பொன்றும் உடம்புறவே போ.

என்றுதம் நெஞ்சிற்கும் அறிவுரை கூறினார்.

இப்படிப் பொருள்வைத்த சேரியில் இருந்த ஆண்டவர், தம் ஆசிரியரிடத்தில் ஞானவாசிட்டம் என்ற வேதாந்த நூலைப்பாடங்கேட்டு, ஐயந்திரிபற அறிந்து கொண்டார். ஏறத்தாழப் பதினாறுவது வயதில் ஞான வாசிட்டப் பாடத்தை நிறைவு செய்த ஆண்டவர், தம் குருநாதருக்கு வழிபாடுசெய்து ஞானநூற் பாடநிறைவு செய்யத் தம் தந்தையாரிடம் பொருள் கேட்டார். தந்தையார் பேசாதிருக்கவே" காது செவிடாய்

விட்டதோ?" என்று ஆண்டவர் கேட்டுவிட்டு, அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார். உடனே ஆண்டவரின் தந்தையாருக்குக் காதுகேளாமல் போயிற்று. அவர் உகந்தலிங்க சுவாமிகளைப் பணிந்து வேண்ட, அதன்படி குருநாதர் ஆண்டவரை அழைத்து "உன் தந்தையின் வருத்தம் தீரத் திருநீறுநல்குவாய்" என்று கட்டளையிட அதன்படி ஆண்டவர் திருநீறளித்து. தந்தையின் காதுகளை மீண்டும் முன்போலக் கேட்கவைத்தார். அதன்பிறகு தந்தை பொருள்தர, ஞான வாசிட்ட நிறைவு சிறப்பாக நடந்தேறியது.

இது நடந்த சில நாட்களில் குருநாதர் உகந்தலிங்க தேசிகர் சமாதியடைய, ஆண்டவர், திருவாரூர் தட்சிணா மூர்த்தி சுவாமிகள், திருவண்ணாமலை ஈசான்ய சுவாமிகள் ஆகியோரை வரவழைத்து, குருபூஜை செய்து, குருநாதர் அதிஷ்டான ஆலயம் எடுப்பித்து, அதைப் பாதுகாக்க மடம் ஒன்று கட்டி ஸ்ரீ வீரபத்திர சுவாமிகளை மடாதிபதியாக்கிக் காரைக்குடிக்கு எழுந்தருளினார்.

காரைக்குடிக்கு அருகில் உள்ள கோவிலூர்க் கோயில், மிகத்தனிமைக்குரியதாகவும், மனத்தைஈர்ப்பதாகவும், அமைந்ததால், அந்தக் கோயிலுக்கு நல்லான் செட்டியாருடன் ஒவ்வொரு திங்கட் கிழமையும் வெள்ளிக்கிழமையும் போய் வழிபாடு செய்யத் தொடங்கினார். ஆண்டவர் அருகில் வந்ததும் ஆண்டவன் தன் அருள் சக்தியாகிய திருநெல்லை அம்மையின் மூலம் திருவிளையாடலைத் தொடங்கினான்.

ஒருநாள் இரவில் வழிபாடு செய்யக் கோவிலூர்க்குச் சென்ற ஆண்டவர், மழை அதிகம் பெய்ததால், கோவிலூர் ஆலயத்திலேயே நண்பருடன் தங்கினார். சந்நிதியில் இருந்த கூரைக் கொட்டகை எங்கும் ஒழுகி இருக்க இடமில்லாமல்

போய்விட்டது. இரவு முழுவதும் உறங்காதிருந்த ஆண்டவர் விடிந்ததும், கூரையை மாற்றிப் பினேயோலே போடலாம் என்றெண்ணித் தொழிலாளரை வரவழைத்தார். அவர்கள் கொட்டகையின் மீதேறியதும், சமயம் பார்த்திருந்த திருநெல்லே அம்மையின் அருளால், கொட்டகை முழுவதும் அடியோடு சாய்ந்தது. அதனையுணர்ந்த ஆண்டவர் இதைக் கற்பணி-யாக்க வேண்டுமென்று நினைத்தார். வீட்டிற்குப் போனதும் அடியார்கள் நினைவில் ஆலயப்பணியை மறந்துவிட்டார். திருநெல்லேயம்மை ஒருமங்கை வடிவத்தில் ஆண்டவரின் தாயிடம் சென்று "உன்மகன் நான் இருந்த வீட்டைக் கற்பணியாக்குகிறேன் என்று சொல்லி இருந்த கொட்டகை-யையும் பிரித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டானே இது சரியா?" என்று கேட்டு மறைந்தாள். இதை ஆண்டவரின் தாய் ஆண்டவரிடம் அறிவிக்க, அம்மா! உலகமெலாம் காக்கும் அன்னை உனக்குக்காட்சிதந்திருக்கிருள் நீசெய்த தவம்அளவிட முடியாது" என்று போற்றினுர். ஆண்டவரைத் திருவயிறு வாய்த்த அம்மையின் பெருமை அளக்கமுடியாததுதானே!

இதன்பிறகு ஆண்டவர், தனவணிகர்களுக்கு ஆணை-யிட்டுப் பொருள்சேர்த்து, செம்பாரங்கல்லால் திருவுண்ணுழி மட்டுமே அமைக்கப்பட்டிருந்த ஆலயத்தைக் கல்லிலே செய்த கலேக்கோயிலாக்கத் திருவுளம் கொண்டு 1807ல் திருப்பணிகளைத் தொடங்கி, திருவுண்ணுழி, இராஜகோபுரம், விமானம், நந்தவனங்கள், தேர் முதலியவற்றைச் செய்து வைத்துக் கோவிலூர்த் திருப்பணியை நிறைவேற்றினுர்.

திருப்பணிக்குப் பொருள் தந்த நகரத்தார்கள் தம் செல்வத்தின் பயனை உணர்ந்தனர். அதன்பிறகு ஆண்டவர் ஆணைப்படி தனவணிகர் செல்வம் ஆலயங்களுக்கும் அறப்

பணிகளுக்கும் செந்தமிழ்த் தேவாரத்திற்கும் சிவனடி வழிபாட்டிற்கும் மிகுதியாகப் பயன்படத் தொடங்கிற்று.

குருநாதராக எழுந்தருளிய ஆண்டவர், அடியார்களுக்கு ஞானமுதை வாரிவழங்கக் கோவிலூரில் ஒரு மடாலயத்தையும் தொடங்கினர். வடமொழி அறியாத தமிழர்களும், சங்கரருடைய அத்வைத சித்தாந்தத்தை உள்ளபடி உணர்ந்து மெய்யுணர்வு பெறும் வகையில் "நானு ஜீவ வாதக்கட்டளை" தொடங்கி "ஞான வாசிட்டம்" ஈருகப் பதினறு சாத்திரங்களைப் பாடக் கிரமமாகப் போதிக்கத் தொடங்கினர். தமிழில் அத்வைத நூல்களைப் போதிப்பதிலும் சாதுக்களை ஆதரிப்பதிலும் கோவிலூர் ஆதீனம் தலைமை மடமாகத் திகழ்கிறது. இங்குத் தங்கிப் புகழ்பெற்ற ஞானிகள் பலராவர். ஆண்டவர் பெயர் நிலைக்கும் வகையில் இம்மடம் பணியாற்றி வருகிறது.

கோவிலூர் ஆண்டவர் மடத்தைத் தொடங்கியதும், தேவகோட்டை அருணசல சுவாமிகள், கண்டனூர் அருணசல சுவாமிகள் ஆகியோர் ஆண்டவரைச் சரண் அடைந்தனர். கோவிலூருக்கு அருகில் மறவன் கோட்டையிலிருந்த நித்திய கல்யாணி உடனுகிய கைலாசநாதர் ஆலயம் மிகவும் பழுதுபட்டு ஒருகால பூஜை மாத்திரம் நடந்து வந்தது. ஆண்டவர் அவ்வழியே வரும்பொழுது நித்தியகல்யாணி அம்மை காட்சி தந்து, "அப்பா! ஒரு கும்ப ஜலத்திற்கும் ஓர் உருண்டை அன்னத்திற்கும் நாங்கள் இங்கே காத்திருக்கிறேம்". என்று கூறி மறைந்தாள்' உடனே ஆண்டவர் கோவிலூரில் கைலாசநாதரையும் நித்திய கல்யாணியையும் எழுந்தருளச் செய்து ஆலயம் கட்டினர். அதனைக் கண்மாய் என்ற இடத்தில் இருந்த அகத்தீசுவரருக்கும் ஆலயத்தில் இடம் கொடுத்து.

பஞ்சாக்கர நாயகி எனும் ஐயுளியம்மைக்கும் ஆலயம் கட்டினார். திருநெல்லை நாயகிக்காக வந்த செல்வத்தை வைத்து ஐயுளியம்மை என்ற பிடாரிக்குக் கோவில் கட்டலாமா என்று நண்பர் நல்லான் செட்டியார் கேட்க

கண்ட பொருளல்ல காணும் பொருளல்ல கண்டபொருள்
மன்றும் இருளல்ல மாயும் ஒளியல்ல மன்னுமொளி
பண்டென் பதுமல்ல இன்றென்ப தல்ல பராபரமாம்
அண்டம் அடங்க அடங்காப் பெருவெளி ஐயுளியே.

என்று பாடிய கோவிலூர் ஆண்டவர், ஐயுளியம்மையின் பெருமையை விளக்கினார்.

பிறகு, கோவிலூருக்கு மேற்கில் உள்ள சாளி என்னும் கிராமத்திலிருந்த அஞ்சாத பெருமாள் என்னும் ஐயனார் கோவிலில் தச்சன் ஒழுங்காகக் கட்டாததால் ஐயனார் முதுகில் புற்று வளர்ந்தது. ஐயனார் வந்து ஆண்டவர் கனவில் சொல்ல ஆண்டவர், தச்சனை அழைத்து ஒழுங்காகக் கட்டச் சொன்னார். தச்சன் கட்டத் தொடங்காததால் அவன் மனைவியின் வயிற்றுக்கரு கலைந்து ஒழுகத் தொடங்கிற்று. திருந்திய தச்சன் ஆண்டவரிடம் திருநீறு பெற்றுத் திருப்பணிசெய்து மனைவியின் கருவையும் காப்பாற்றி, பிறந்த குழந்தைக்கு அஞ்சாத பெருமாள் என்று ஆண்டவர் விரும்பியபடியே பெயரிட்டான்.

கோவிலூர்த் திருவீதிக்குத்தென்புறம் ஒரு கல்மண்டபம் அமைக்க ஆண்டவர் திட்டமிட்டு, முகூர்த்தக்கால் நடுவதற்கு ஏற்பாடு செய்தார். உடைப்பதற்குத் தேங்காய் வரவில்லை என்று ஏங்கியபோது, ஆலயத்திலிருந்து, திருநெல்லையம்மன்,

கன்னிகை வடிவில் தேங்காய் வெற்றிலைபாக்குக் கொண்டு வந்து ஆண்டவர் கைகளில் சேர்த்தாள். ஆண்டவர் அதை வாங்கி அன்னதானம் மாறாமல் நடக்கவேண்டுமென்று திருவுளம் செய்து முகூர்த்தம் செய்தருளினார். அன்றுமுதல் அன்னதானம் சிறப்பாக நடந்து வருவதைக் கண்கூடாகக் காணலாம்.

தம்மை நாடிய தேவகோட்டை அருணாசல சுவாமிகள், கண்டனூர் அருணாசல சுவாமிகள் இருவருக்கும், அஞ்ஞவதைப் பரணி பாடம் சொன்ன ஆண்டவர் அவர்களை, அவர்கள் விரும்பியபடியே துறவடைய அருள்செய்தார். அவர்கள் இருவருமே அன்று முதல் துறவு ஆண்டவர் எனும் பெயர் பெற்றனர்.

தம் இறுதிநாட்களை உணர்ந்த ஆண்டவர், இல்லற அடியார்களையும் துறவிகளையும் அழைத்து, மடத்தைப் பரிபாலனம் செய்யுமாறு கட்டளையிட்டு, தேவகோட்டை அருணாசல சுவாமிகளைத் தம் இடத்தில் அமர்த்தித் துறவு ஆண்டவர் என்ற பட்டத்தோடு மடத்தை நிர்வகிக்கச்செய்து பிலவங்க ஆண்டு பங்குனிஉத்திரத்திருநாளில் கொற்றவாளீசன் திருவடியில் பரிபூரணநிலை எய்தினார்.

பெரிய துறவு சுவாமிகள் எனும் தேவகோட்டை அருணாசல சுவாமிகளும் சிறிய துறவு சுவாமிகள் எனும் கண்டனூர் அருணாசல சுவாமிகளும் ஆண்டவர் அருளால் பல தலங்களையும் வழிபட்டு, சிதம்பரம் வந்து, ஓரிரவில் பசியோடிருந்தபோது நடராசப்பெருமானே அந்தணர்வடிவில்வந்து சர்க்கரை அன்னம் வழங்கினார். சின்ன துறவு ஆண்டவர் காசியில் சமாதிஅடைந்தார். பெரியதுறவு ஆண்டவர்கோவிலூர் ஆண்டவர் கட்டளைப்படி, மடத்தின் பொறுப்பை ஏற்றார்.

கோவிலூர் ஆண்டவர்தம் அருள்வாக்குகள் "சுவானுபவத் திருவாக்கு" என்னும் நூலாக வெளிவந்துள்ளன. அவற்றில் உள்ள பாடல் நயங்களும் சொற்பொருள் நயங்களும் தத்துவங்களும் ஆண்டவர் பெருமையை அறிவிக்கின்றன. பிள்ளையார்பட்டிக் கற்பகவிநாயகர்மீது ஆண்டவர் பாடிய

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகள் முழுதகற்றும்
முகத்தி னானை
அற்பசுகத் தெனையழுத்தா வைங்கரனைப் பிற்பவமும்
அகற்றும் கோவைச்
சொற்பழுது புரியாத வணிகர்குலம் தினம்பணியும்
துணைத்தா ளானைக்
கற்பகத்தின் மிடியகற்றும் கற்பகமாம் நாயகனைக்
கருத்தில் வைப்பாம்.

என்ற பாடல் கற்பக விநாயகர் பெருமையோடு, வணிகர் பெருமையையும் குறிப்பிடுகிறது. தன்னுடைய குருநாதனைச் சிவமாக எண்ணி சிவனுக்குரிய பெருமைகளைக் குருநாதனுக்காக்கி,

ஏமநற் கிரியை வலம்செயும் கதிரோன் எழுவதன்
முன்னமே எழுந்து
சேமநீர் படிந்து செபித்துனைப் பரவும் சென்மமே
எனக்குநீ தருவாய்
காமனை எரித்துக் காலனை உதைத்துக் கஞ்சனற்
சிரநகத் தரிந்த
ஓமெனும் பொருளே பொருள்வைமா நகர்வாழ்
உகந்ததே சிகசிகா மணியே.

என்றுபாடிய பாடலும், இன்னும் பிறபாடல்களும் போற்றத்

1973
R65



தக்கவை. தன் நெஞ்சிற்கு அறிவுறுத்துவது போல, ஆன்மாக்களுக்கு அறிவுரை கூறிய ஆண்டவர்

சித்திரத்தி லெவரைந்த தீபம்போல் நில்லாமல்
கத்தித் தலைவெடிக்கக் கற்றனையே நெஞ்சகமே

என்று சும்மாயிருக்கும் சொல்லற்ற நிலையைப் பாடுகிறார். தன் மனம்கவர்ந்த அரியக்குடிப் பெருமாளின் பெருமையை

நடந்து விடுங்காண் இருவினைகள் நாரா யணாய நமவென்னில்
நடந்து விடுங்காண் பிறப்பிறப்பு நாரா யணாய நமவென்னில்
நடந்து விடுங்காண் பகையுறவு நாரா யணாய நமவென்னில்
நடந்து விடுங்காண் அகங்காரப்பேய் நாரா யணாய நமவென்னில்

என்று பாடிமகிழ்கிறார். அவருடைய சுவானுபவத் திருவாக்குகளில்

1) பரிபூரணமாகிய தனக்கு என்ன வேண்டுவது?
2) எல்லாம் தோற்ற மாத்திரம்
3) பாசபந்தம் வரும்போது பாசநிவிர்த்தியும் தோன்ற வேண்டும்.
4) சுகதுக்கம் உள்ளவரையில் தாரதம்மியம் நீங்காது.
5) இந்திரசாலக் காரனிடத்தில் கந்தருவபுரம் தோன்றி நில்லாமல் அழிந்துபோவது போலத் தன்னிடத்தில் உண்டாகா நின்ற சங்கற்பம் எவ்வளவோ அநேகமா வந்தும் ஒன்றும் நிற்கவில்லை.
6) எல்லாம் சிவன் செயல்தான்
7) பேரறிவிலே சமசாட்சிதான். பேதங்கள் எல்லாம் சிற்றறிவிலேதான்
8) செனன மரணமும் நினைவு மாத்திரம்
9) அக்கினியில் எவ்வளவு பொறி கிளம்பினாலும் அக்கினிக்கு லயமில்லாதது போலப் பூரணமான தன்னிடத்தில்

தேகாதி முதலாய, வாழ்தந்தாயும் தாழ்ந்ததாயும் என்ன நினைவு வந்தாலும் கற்பிதம். தான் நித்தியம்.

10) ஒன்றிலே தோன்றி அனைத்துருவமான உணர்வுக்குப் பகை உறவு என்றுரைப்ப தெங்கே?

11) திருநதித் துறைகளெல்லாம் தீம்புனல் வறந்தவேயோ?

12) பழுதையிலுண்டான பாம்பு பழுதையே என்று சொல்லலாம். அதுபோலப் பிரம்மத்திலுண்டான சகத்துப் பிரமந்தான்.

ஆகியவை குறிப்பிடத் தக்கவை. ஆன்மாவை அறிவதற்-கும் ஆண்டவனை உணர்வதற்கும் "நான் யார்" என்று கேட்டறிய வேண்டும் என்று ஞானிகள் கூறுகிறார்கள். இந்த நான் யார் என்ற வினாவுக்கு விடைசொன்ன ஆண்டவர்

நான் அகண்டன்; நான் அகர்த்தா; நான் அகாமன்;
நான் அகாரணன்; நான் அநந்தன்; நான் அநாதி
நான் அமனசு; நான் சுயம்பிரகாசன்; நான் முக்தன்

என்றப்படி 195 திருநாமங்களில் ஆன்ம விளக்கம் தருகிறார். அவற்றைச் சொருபாநுசந்தான நாமங்கள் என்று ஞானிகள் குறிப்பிடுகிறார்கள்.

## ஆண்டவருக்குப் பின் வந்த மடாதிபதிகள்

ஆண்டவருக்கு அடுத்து துறவாண்டவர் ஆகிய தேவ கோட்டை அருணாசல ஞான தேசிக சுவாமிகளும், அவர் களுக்குப் பிறகு கருணாநிதி என வழங்கும் சிதம்பர ஞான தேசிக சுவாமிகளும் அருளாட்சி நடத்தினர். பிறகு காரைக் குடி இராமசாமி ஞானதேசிக சுவாமிகள், புதுவயலைச் சேர்ந்த

வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் (திருக்களர் ஆண்டவர்) தேனிபட்டி அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள், தேவகோட்டை மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் காரைக்குடி சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகள் ஆகியோர் மடாதிபதிகளாக இருந்து அருள்புரிந்தனர். அதற்கடுத்து, காரைக்குடியைச் சேர்ந்த தவத்திரு இராமனாத ஞானதேசிக சுவாமிகள் 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி அருளாட்சி புரியத் திருவண்ணாமலையிலிருந்து கோவிலூருக்கு எழுந்தருளி அருளாட்சி செய்து வருகிறார்கள்.

## தவத்திரு இராமனாத ஞானதேசிக சுவாமிகள் பெருமை

பார்த்தால் துறவி; பேசினால் ஞானி; பழகினால் குழந்தை. என்ன விந்தை இது? ஆம். இந்த விந்தை மனிதர் தான் தவத்திரு இராமனாத சுவாமிகள்.

சொல்லரிய ஒளிவீசும் கருணைக் கண்கள்;
துறவுக்கும் தூய்மையினை அளிக்கும் தோற்றம்;
வெல்லரிய புலனைந்தும் வென்ற நெஞ்சம்;
வேதாந்தப் பொருளெல்லாம் விரிக்கும் சொற்கள்
நெல்லையெனும் தாய்மடியில் திகழும் பிள்ளை;
நினைவாலே ஆலயத்தை திருத்தும் பார்வை;
செல்வழிக்குக் கதியாகும் இராம னாத
தேசிகரின் தோற்றமது சிவத்தின் தோற்றம்.

என்று போற்றத்தக்க பெருமை படைத்த சுவாமிகள், காட்சிக்கெளியராய்க் கருணைமிகு சொல்லராய்க் கடவுளின் தோற்றமாய்க் கோவிலூரில் வீற்றிருக்கிறார்.

நாட்டரசன் கோட்டையில் பிறந்து, காரைக்குடியில் வளர்ந்து, கோவிலூர் ஆண்டவர் அருளால் திருவண்ணாமலை

ஈசானிய மடத்தில் பணியாற்றிய தவத்திரு இராமனுதேசிகர் அடியார்களை ஆதரித்துச் செல்வர்களுக்கு அருள்செய்து வீற்றிருக்கிறர்.

கோவிலூர் ஆண்டவரின் குருநாதராக விளங்கிய ஏகந்தலிங்க தேசிகர் அருள்பெற்ற கந்தப்ப சுவாமிகள், திரு வண்ணமலையில் தவம் செய்தார். அவர் பக்கத்தில் ஒரு புலி வந்து படுத்திருக்கும். அதைப் பார்த்து "அண்ணமலையப்பா வந்தனையா" என்று கந்தப்பசுவாமிகள் வழிபடுவார். அண்ண மலையார் ஆலயத்தின் ஈசானிய மூலையில் தவம் செய்த கந்தப்ப சுவாமிகள் பெருமையை உணர்ந்த திருவண்ணமலை அன்பர்கள் ஈசானிய மடம் கட்டி அதில் கந்தப்ப சுவாமிகளை ஈசானிய ஞான தேசிகர் என்ற திருநாமத்தோடு அருளாட்சி புரியச் செய்தார்கள். அத்தகைய பெருமை வாய்ந்த ஈசானிய மடத்தில் ஆட்சிபுரிந்த தவத்திரு இராமனுத ஞான தேசிக சுவாமிகள் 1971 ல் கோவிலூர் மடத்தின் ஆட்சிக்கு எழுந்தருளினர்கள். 1908ல் குடநீராட்டுவிழாச் செய்யப்பட்ட கோவிலூரில் மூன்ருவது முறையாக 1978 இல் குடநீராட்டு விழாச் செய்யத்திருவுள்ளம் பற்றினர்கள். அவர்கள் ஆணைப்படி தனவணிகப் பெருமக்கள் பலரும் முயற்சியெடுத்து, ஆலயத்தைப் புதுப்பித்து, விமானங்கள் இராஜகோபுரங்கள் ஆகியவற்றைச் செம்மைப்படுத்தி மின்விளக்குச் சாதனங்களைப் புதுப்பித்து, காளயுக்தி ஆண்டு சித்திரைத்திங்கள் எட்டாம் தேதி (21-4-78) குடநீராட்டு விழா நடைபெறுகிறது. இந்தத் திருநாளில் வந்து வழிபட்டு, குருநாதரைக் கண்டு, திருநெல்லையம்மையை நினைந்து கொற்ற வாளீசனை வழிபடும் அடியார்களுக்கு இகபர சௌபாக்கியங்களும் பெருகும் என்பதில் ஐயமில்லை. கோவிலூரில் திருப்பணிக்கு யார் யாரெல்லாம் உதவினர்களோ அவர்களுக்கெல்லாம் கோவிலூர்ப் புராணம் பாடிய மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்

கொற்றவாள் ஈசற்(கு) ஆலயம் விமான
கோபுர மண்டபம் ஆதி
முற்றவர் வத்தில் புரிந்தவர் புரிவோர்
முனிவரும் விழாச்சிறப்பு எடுப்போர்
செற்றபல் லுபசா ரங்களும் பரிவால்
செய்பவர் பிறரிரும் புநரும்
உற்றவர் ஆவர்கள் யாவரா யினும்யாம்
உண்மையில் போற்றுதும் உவந்தே.

என்று வாழ்த்துக்கூறி வணங்குகிறார்கள். நாமும் இந்த நன்னாளில் கொற்றவாளீசர் பதம் போற்றி, குருநாதர் அடி போற்றிப் பேரின்பப் பெருவாழ்வை அடைவோமாக!

## கோவிலூர் மடாதிபதிகள்

1. ஸ்ரீமத் ஆண்டவர் என வழங்கும் முத்து ராமலிங்க ஞானதேசிகர் — காரைக்குடி
2. ஸ்ரீலஸ்ரீ துறவு ஆண்டவர் என வழங்கும் அருணாசல ஞான தேசிக சுவாமிகள் — தேவகோட்டை
3. ஸ்ரீலஸ்ரீ கருணாநிதி என வழங்கும் சிதம்பர ஞான தேசிக சுவாமிகள் — தேவகோட்டை
4. ஸ்ரீலஸ்ரீ ராமசாமி ஞான தேசிக சுவாமிகள் — காரைக்குடி
5. ஸ்ரீலஸ்ரீ திருக்களர் ஆண்டவர் என வழங்கும் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் — புதுவயல்
6. ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகள் — தேனிபட்டி

7. ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகள்
— தேவகோட்டை

8. ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞான தேசிக சுவாமிகள்
— காரைக்குடி

9. ஸ்ரீலஸ்ரீ இராமனுத ஞான தேசிக சுவாமிகள்
— காரைக்குடி

## ஆண்டவன் துதி

கொற்றவா ளீசர் பாதம் கூற்றினை உதைக்கும் பாதம்
நற்றவம் புரியும் நெல்லை நாயகி வணங்கும் பாதம்
மற்றொரு பற்று மில்லார் மனத்திடை யமரும் பாதம்
கற்றவர் புகழும் பாதக் கமலமே சூடி வாழ்வாம்.

## அம்மை துதி

சொந்தமாய்க் கழனி மண்ணில் சூழ்ந்தநெல் வயலைக் காத்துத்
தந்திடும் அன்பு சேர்ந்த தயிரமு துண்டு நின்றாய்
இந்தநாள் நெல்லை யம்மா! இருவினைப் பறவை மேயும்
சிந்தனை வயலில் உத்தன் திருவடி வைத்தி டாயோ!

## கோவிலூர் ஆண்டவர் துதி

ஓமெனும் பொருளாய்த் தோன்றி உற்றவர் பற்றை மாற்றி
ஆமைபோல் அடங்கச் செய்யும் ஆண்டவர் ஆகி வந்து
மாமலர்ப் பாதத் தெந்தை ஆலயம் வரைந்த முத்து
ராமலிங் கேசர் பாத நாண்மலர் வாழ்த்தி வாழ்வாம்.

## துறவு ஆண்டவர் துதி

ஆருயிர்க் கன்பு செய்யும் ஆண்டவர் பாதம் போற்றிப்
பேரமர் துறவை ஏற்றுப் பெருமையால் உயர்ந்து நின்று

காரமர் கண்டத் தெந்தை கழலடி நினைக்கச் செய்த
சீர்அரு ணா லை தேசிகர் பாதம் போற்றி.

## சிதம்பர ஞான தேசிக சுவாமிகள் துதி

இதந்தரும் நெல்லை யம்மை ஈசனுர் புராணந் தன்னை
விதந்தரக் கவிதை யாக்கி மீனாட்சி சுந்த ரன்தான்
பதம்பெறப் பாட வைத்துப் பணியினால் பெருமை பெற்ற
சிதம்பரம் ஆன ஞான தேசிகர் பாதம் போற்றி!

## இராமசாமி ஞான தேசிகர் துதி

குருவென வந்தே ஆளும் கொற்றவா ளீசர் பாத
மருவளர் மலரைச் சூடி மடத்தினைக் காத்தல் செய்து
தருவெனச் சமய ஞானம் தந்தருள் செய்தே நின்ற
திருவளர் இராம சாமி தேசிகர் பாதம் போற்றி

## வீர சேகர ஞான தேசிகர் துதி

ஆகமப் பண்புக் கேற்ப ஆலயம் கட்டி வைத்தே
மேகமாய் அருளைப் பெய்து வியன்திருக் களரில் ஆன்ம
யோகமே வடிவாய் நின்ற யோகியாம் தெய்வ வீர
சேகரன் என்னும் ஞான தேசிகர் பாதம் போற்றி.

## அண்ணாமலை ஞான தேசிகர் துதி

வீரமே விளைக்கும் ஞான வேட்கையால் ஆண வத்தைத்
தீரவே மாற்றி அன்புத் திறத்தினுல் மடத்தை ஆண்டு
பாரெலாம் கடந்த ஈசன் பாதமே நிலையாம் என்று
சேர் அண்ணா மலையாம் ஞானதேசிகர் பாதம் போற்றி.

## மகாதேவ ஞானதேசிகர் துதி

அகத்திலே புகுந்து நிற்கும் ஐம்புலக் கள்வர் மாய
சகத்திலே வெற்றி கொண்டு, தன்னுனே சிவத்தைக் கண்டு
புகழையும் கடந்து தெய்வப் பொலிவினைக் காட்டி அன்பாய்த்
திகழ் மகா தேவ ஞான தேசிகர் பாதம் போற்றி.

## சோம சுந்தர ஞான தேசிகர் துதி


பொய்யினை மெய்யென் றேதிப் புலம்பிடும் வாழ்வை மாற்றி
வையகத் தினிலே ஞான வாட்படை கையில் ஏந்திச்
சைவமே தழைத்து வாழத் தமிழ்மடம் உயர்ந்தி ருக்கச்
செய்திடும் சுந்த ரப்பேர்த் தேசிகர் பாதம் போற்றி.

## இராமனாத ஞான தேசிகர் துதி

தவமெனும் யோகத் துள்ளே தமிழெனும் அமுதம் காட்டிப்
பவவினை மாற்ற முக்கட் பரமனே வந்த தைப்போல்
இவனெனச் சைவ வேதம் இயம்பிட நடந்து வந்த
சிவமெனும் இராம னாத தேசிகர் பாதம் போற்றி.

## வாழ்த்து

கோவிலூர் என்றும் வாழ்க! கொற்றவா ளீசர் வாழ்க!
தாயெனும் நெல்லை யன்னை தண்ணளிக் கருணை வாழ்க!
தூயராய் மடத்தில் வாழும் துறவியர் பாதம் வாழ்க!
நேயமிக் குடைய அன்பர் நீண்டநாள் நிறைந்து வாழ்க!



1973
R65

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

இன்னலுறும் உடலிருக்க எண்ணுமெண்ணம் போதும்
இருநான்கு சித்திகளில் இச்சைவைத்தல் போதும்
நன்மையமாம் சோதிடத்தில் நாட்டமினிப் போதும்
நல்லிரும்பு பொன்னுக்கும் நசையதுவும் போதும்
பின்னமுறும் வைத்தியத்தைப் பெறும்ஆசை போதும்
பேதமுறும் இவைமுதலாம் பிராந்தியினை விட்டுத்
தென்னனுக்கும் மலையனுக்கும் செல்வியெனலாகும்
தென்கமுனித் திருநெல்லை மின்பாதம் நாடே.

—கோவிலூர் ஆண்டவர்

ஓரியண்ட் பிரிண்டர்ஸ் • … காரத் தெரு • மதுரை
Phone: 32720